**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**
**Uni5 பக்த விஜயம் - 68. ஸ்ரீபெரிய தாஸ் சுவாமிகள்**

பக்த விஜயத்தில் தேச வேற்றுமையும் இல்லை, மொழி வேற்றுமையும் இல்லை."அப்பாலும் அடிசார்ந்தார்" என்று சுந்தரர் போற்றுவது போல் தமிழகத்தில் வாழ்ந்த ஒரு அன்பரையும் வடதேச பக்த விஜயம் அங்கீகாரம் செய்வதைக் காண்கிறோம்.

ஸ்ரீபெரிய தாஸ் சுவாமிகள் தஞ்சாவூரில் வாழ்ந்த மஹான்.மிக ஸ்ரத்தையான நரசிம்ம உபாசகர்.இவரது இயற்பெயர் பெரியசாமி.

மன்னார் நாயகர் என்ற சிற்றரசன் தஞ்சையில் வாழ்ந்த காலத்தில் இவர் வாழ்ந்தார்.இவர் அப்பா ஸ்ரீமான் ஷேசாச்சல செட்டியார் மன்னனுக்கு அலுவலர் பதவியை வகித்தார்.அத்துடன் ஊரில் பெரிய வளையல் வ்யாபாரமும் செய்தார்.

மிகச் சிறிய வயதிலேயே இவர் நரசிம்ம உபாசனையை மேற்கொண்ட போது முதலில் பெற்றோர் மகிழ்ந்தனர்.ஆனால் இவர் எதிலும் பற்றே இல்லாமல் பக்தி வழியில் வாழ்வதை அப்பா குறிப்பாக எதிர்த்தார்.

**கடையையே தானம் செய்தார்**
"வளையல்கள் வினையின் சின்னம்.அதைக் கழற்றினால் தான் இறைவனிடம் முக்தியால் ஐக்யம் ஆக முடியும்! அத்தொழிலை ஏன் வளர்த்துப் பாவம் செய்ய வேண்டும்?" என்று கூறி ஒரேடியாக வளையல் கடையையே தானம் செய்து விட்டார்.வீட்டை விட்டு வெளியேறி தஞ்சை மாமணிக் கோயிலில் வாழ ஆரம்பித்தார்.

**கோலிக்குள் கண்ணன்**
மன்னனைக் காணச் செல்லும் போது இவரது குதிரையில் கால் பட்டுத் தெருவில் விளையாடும் சிறுவர்தம் கோலிகள் உடைந்தன. "நீல மணி வண்ணன் கண்ணனாக எண்ணி விளையாடினோம்! அதைக் குதிரை உடைத்ததே!" என்று ஒரு பையன் கூறக் கேட்டு, கோலிக்குள் கண்ணனைக் காணும் பையன்களின் உயர்ந்த பக்தியை எண்ணி எண்ணி அவர் அரசனை அடைந்தார்.

**வைகுண்டம் எத்தனை தூரம்?**
இதுவே மன்னனின் கேள்வி.பலரும் கலங்கிக் குழம்பினர்.
**"மன்னா! யானை "ஆதிமூலமே!" என்று அழைத்ததும் இறைவன் வருகிறான் என்றால் வைகுண்டம் நமக்கு மிக அருகில் ஏன் நம்முள் சதா இருக்கிறது.அதை வெளியில் போய் எதற்குத் தேட வேண்டும்?"** என்று உணர்த்தினார்.

இவரது எளிய போதனைகளும் தூய நரசிம்ம பக்தியும் அரசனுக்கும் அலுவலர்களுக்கு நரசிம்ம தரிசனம் அளித்தது.

பிற்காலத்தில் இவர் ஸ்ரீரங்க ஸ்தலத்தில் காட்டு அழகிய சிங்கர் கோயிலிலேயே த்யானம் ஆன்மீக உரை செய்து மக்களுக்கு ஆன்மீகம் போதித்து முக்தி பெற்றார்.

ஹரி ஓம்!